## தரகம்பட்டியில் புதிய நீதிமன்றம் அமைத்திடுவீர்! கிருஷ்ணராயபுரம் நீதிமன்றத்துக்கு புதிய கட்டடம் வேண்டும்!

# மைலம்பட்டி குறு வட்டத்தினை இரண்டாகப் பிரித்து - புதிய குறு வட்டம் உருவாக்கிடுவீர்!

## சட்டப் பேரவையில் – கிருஷ்ணராயபுரம் க.சிவகாமசுந்தரி கோரிக்கை!



சென்னை, ஏப். 11-

சட்டப் பேரவையில், மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய கிருஷ்ணராயபுரம் தொகுதி கழக உறுப்பினர் க.சிவகாம சுந்தரி, "கிருஷ்ணராயபுரம் தொகுதியில் - மைலம்பட்டி குறுவட்டத்தினை இரண்டாகப் பிரித்து, ஒரு புதிய குறுவட்டம் உருவாக்கித் தாரீர்!" என்றும் - "தரகம்பட்டியில் புதிய நீதிமன்றம் அமைத்துத் தர வேண்டும்" என்றும் "கிருஷ்ணராயபுரம் நீதிமன்றத்திற்கு புதிய கட்டடம் அமைத்திடுவீர்!" என்றும் கோரிக்கை விடுத்தார்.

சட்டப் பேரவையில் அவர் பேசியதாவது:-

தமிழனுக்கு அடையாளம் வள்ளுவர் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்ட குமரி முனையில் 133 அடி உயரத்தில் சிலை அமைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்கி, தமிழர் மானம் காக்க நெஞ்சுரத்தோடு நரியின் வஞ்சக சூழ்ச்சியுடைய எதிரியை எதிர்த்தும், எல்லோருக்கும் எல்லாம் என்ற இலக்கோடு ஆட்சி நிர்வாகத்தில், மகளிர் விடியல் பயணம், குடும்பத் தலைவிக்கு உரிமைத் தொகை, இருபாலர் மாணவர்களுக்கு மாதம் ஆயிரம் வழங்கும் திட்டம் புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், காலை உணவுத் திட்டம், மக்களைத்தேடி மருத்துவம், இல்லம்தேடி கல்வி, நான் முதல்வன் திட்டம், இன்னுயிர் காப்போம்-நம்மைக் காக்கும் 48 திட்டம், முதல்வர் மருந்தகம் திட்டம் என மக்கள் நலத் திட்டங்களின்மூலம் தாயுமானவராக எங்களுக்கு காட்சி தந்து, வஞ்சிக்கும் ஒன்றிய பாரதிய ஜனதா அரசு, தாங்கள் ஆளும் மாநிலத்திலும் தமிழ்நாடு அரசு திட்டங்களை அமுல்படுத்துகிறது என்கிற அளவுக்கு இந்தியாவிற்கே வழிகாட்டும் நம்முடைய முதல்வர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

**இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்**
**ததனை அவன்கண் விடல்**

என்ற குறளுக்கேற்ப தகுதியறிந்து ஒவ்வொரு துறையையும் பார்த்து ஒதுக்கி, தடம் மாறாமல் ஆட்சி செவ்வனே நடத்தும் முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

தமிழகத்தின் விடிவெள்ளி - நாளைய நம்பிக்கை நட்சத்திரம், கலைஞர் அவர்களை போலவே ஆரிய எதிர்ப்பிலும், சனாதன எதிர்ப்பிலும் உறுதியாகக் குரல் கொடுத்து தமிழ் மண்ணின் சுய மரியாதையைக் காத்து வரும்,

**தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்**
**வன்மையு ளெல்லாந் தலை**

என்ற குறளுக்கேற்ப தம்மைவிட பெரியாரை நட்புடன் பழகுவது தன் வலிமைக்கெல்லாம் வலிமை என அறிந்து பழகும் ஒப்பற்ற பண்புடைய இளந்தலைவர், தமிழ் நாட்டை விளையாட்டில் தலைநகராக்க முற்படும் துணை முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**துன்பம் உறவாரினும் செய்க துணிவாற்றி**
**இன்பம் பயக்கும் வினை**

என்னும் குறளுக்கேற்ப துன்பம் மிகுதியாக வந்த போதும் முடிவில் இன்பம் தரும் செயலைத் துணிந்து செய்து முடிக்கும் ஆற்றலுடைய, எங்கள் மாவட்ட கழக செயலாளர், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அண்ணன் திரு. V. செந்தில்பாலாஜி அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என் வாழ்நாள் கடமைப்பட்டுள்ள கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதி மக்களையும், எனக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கி வரும் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக வழக்கறிஞர்கள் ஆகியோரை வணங்கியும், பேரவைத் தலைவர் அவர்கள், அவை முன்னவர் நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், உணவுத் துறை அமைச்சர் அவர்கள், அரசு கொறடா அவர்கள், அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் வணங்கி எனது உரையைத் துவங்குகிறேன்.

சமூக பொருளாதார இயக்கமான கூட்டுறவு இயக்கம், நாட்டில் வறுமையை ஒழிக்கவும், உற்பத்தியுடன் இணைந்து வேலை வாய்ப்பினை உருவாக்குவதிலும், சமூக ஒருமைப்பாட்டை மேம்படுத்துவதிலும் முக்கியமான பங்காற்றி வருகிறது.

விவசாயிகள், கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் நோக்கில் வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாராத காரியங்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்குவதே கூட்டுறவு நிறுவனங்களின் முக்கிய நோக்கமாக இருக்கிறது. அதேபோல, அரசின் நலத் திட்டங்களை செயல்படுத்துவதில், அரசுக்கும் பொதுமக்களுக்கும் பாலமாகவும் செயல்படுகிறது.

ஒவ்வொரு முறை கழகம் ஆட்சிக்கு வரும்போதெல்லாம், கூட்டுறவு இயக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. கூட்டுறவு தேர்தல்களை நடத்தி, ஜனநாயக முறைப்படி நிர்வாகம் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், ஐந்தாவது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்ற போது, கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலே மறைந்த விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றும் விதமாக 7,000 கோடி விவசாயக் கடனை தள்ளுபடி செய்தார்கள். இதில் 22 இலட்சத்து 40 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் பயனடைந்துள்ளனர். அதோடு மட்டுமல்லாமல், உரிய தவணைக் காலத்தில் பயிர் கடனை திருப்பி செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியை அரசே ஏற்கும் என்ற வரலாற்று சிறப்புமிக்க திட்டத்தையும் அமல்படுத்தினார்கள். அதோடு மட்டுமல்லாமல், பெண்களின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியையும், வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்தும் உன்னத நோக்கத்தோடு சுய உதவிக் குழுக்களை உருவாக்கி சுழல் நிதி மற்றும் குழு கடன் வழங்கினார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் ஏழை எளிய விளிம்பு நிலையில் உள்ள மக்கள் பயனடையும் வகையில், ஐந்து பவுன் நகைக் கடன்கள் ரூபாய் 6,000 கோடியை தள்ளுபடி செய்தார்கள். இதன்மூலம் 13 இலட்சத்து 12 ஆயிரத்து 717 கடன்தாரர்கள் பயனடைந்துள்ளனர். அதே போல், 31-3-2021-ல் நிலுவையாக இருந்த மகளிர் சுய உதவிக் குழு கடன்கள் ரூபாய் 2,756 கோடியை தள்ளுபடி செய்துள்ளார்கள். இதன்மூலம் 15 இலட்சத்து 88 ஆயிரத்து 309 மகளிர் பயனடைந்துள்ளனர். மகளிர் சுய உதவிக் குழு கடன் உச்ச வரம்பை 12 இலட்சத்திலிருந்து 20 இலட்சமாக உயர்த்தப்பட்டு, 1,25,167 சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 6,265 கோடி கடன் வழங்கி மகளிர் வாழ்வை மேம்படுத்தியுள்ளார்கள்.

2021-2022 நிதியாண்டு முதல் நடப்பு நிதியாண்டு முடிய 67 இலட்சத்து 81 ஆயிரம் விவசாயிகள் பயன் பெறும் வகையில் 54,800 கோடி பயிர் கடனும், 12 இலட்சத்து 24 ஆயிரம் நபர்களுக்கு ரூ.6,588 கோடியே 16 இலட்சம் கால்நடை வளர்ப்புக் கடனும் வழங்கியுள்ளார்கள். அதோடு மட்டுமல்லாமல், கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு 5 சதவிகித வட்டியில் 35.35 கோடி கடன், மாற்றுத் திறனாளிகளுக்கு சுமார் 151.66 கோடி கடன், மகளிர் தொழில் முனைவோருக்கு 191.23 கோடி கடன் வழங்கியுள்ளார்கள்.

உலகில் வாழுகின்றவர்களுக்கெல்லாம் உணவு கொடுத்தவரே உயிர் கொடுத்தவராவார் என்ற கூற்றிற்கேற்ப பொதுத் துறை நிறுவனங்களின் நிறுவன நாயகராக முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1972 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, பொது விநியோகத் திட்டத்திற்கு தேவையான இன்றியமையா பொருட்களை கொள்முதல் செய்து, சேமித்து, விநியோகம் செய்யும் உன்னத பணிகளை கடந்த 50 ஆண்டுகளாக மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டில் உணவுத் துறையில் 2 கோடியே 25 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு 36,954 நியாய விலைக் கடைகள்மூலம் மிகவும் தரமான பொருட்களை வழங்கி மாபெரும் புரட்சியை உணவுத் துறை செய்து வருகிறது. அதே போல், குடும்ப அட்டைகள் பெறுவதற்கு கடந்த ஆட்சிக் காலங்களில் நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய நடவடிக்கைகளின் காரணமாக திராவிட மாடல் ஆட்சியில் 15 நாட்களில் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது.

எனது கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் நான்கு ஆண்டுகளில் 9,867 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மக்கள் நீண்ட காலமாக பகுதிநேர ரேசன் கடைகள் வேண்டும் என கோரிக்கை வைத்தும், கடந்த ஆட்சி காலங்களில் செய்து கொடுக்கப்படவில்லை. திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் பரிந்துரையில் 21 பகுதிநேர ரேசன் கடைகள், 3 முழுநேர ரேசன் கடைகள், மொத்தம் 24 புதிய ரேசன் கடைகளுக்கு ஆணை பெற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 13 ரேசன் கடைகளுக்கு புதிய கட்டடம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்களின் நேரடி பார்வையில் உணவுத் துறை மிகவும் சிறப்பாக செயல்பட்டு மக்களுக்கு சேவைபுரிந்து வருகிறது.

கரூர் மாவட்டம் 30-9-1995-ல் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. கரூர் மாவட்டத்திற்கு என தனியாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அமைத்துக் கொடுக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் 10 நியாய விலைக் கடைகள் வாடகை கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அவைகளுக்கு புதிய கட்டடம் அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியம், மணவாசி, மாயனூர் ஆகிய ஊராட்சிகளில் அறுவடை செய்யும் நெல்லை விற்பனை செய்ய சுமார் 8 கி.மீ. தொலைவில் உள்ள கட்டளை அல்லது வளையல்காரன்புதூரில் உள்ள நெல் கொள்முதல் நிலையத்திற்கு கொண்டு செல்ல வேண்டியுள்ளதால், விவசாயிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இந்த இரண்டு ஊராட்சி பொது மக்கள் பயன்பெறும் வகையில் மணவாசியில் கட்டடத்துடன்கூடிய நெல் கொள்முதல் நிலையம் அமைத்து கொடுக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த நான்கு ஆண்டு கால திராவிட மாடல் ஆட்சியில் கிருஷ்ணராயபுரம் சட்டமனறத் தொகுதியில் நிறைவேற்றப்பட்டுள்ள முக்கியமான திட்டங்களை மாமன்றத்தில் பதிவு செய்ய கடமைப்பட்டுள்ளேன்.

கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றிய பகுதியில் மகாதானபுரம், பிச்சம்பட்டி, மேட்டுத்திருக்காம்புலியூர் மக்களால் 30 ஆண்டுக் காலமாக கோரிக்கை வைத்து வந்த 5 பாலங்கள் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் 10.27 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளன. தரகம்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 12 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குடகனாறு அணையிலிருந்து வெள்ளியணை பெரிய ஏரிவரை கால்வாய் மேம்படுத்தும் பணி 65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. கிருஷ்ணராயபுரம், தாந்தோனி மற்றும் கடவூர் ஊராட்சி ஒன்றியங்களில் முதலமைச்சர் கிராம சாலைகள் திட்டம் மற்றும் NABARD திட்டத்தின்மூலம் சுமார் 79.98 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தார்ச்சாலைகள் மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் 247 பயனாளிகளுக்கும், ஊரக வீடுகள் பழுதுபார்த்தல் திட்டத்தில் 922 பயனாளிகளுக்கும், பணி ஆணைகள் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்றுள்ளது. (மணியடிக்கப்பெற்றது)

நெடுஞ்சாலைத் துறை சார்பில் சாலை மேம்படுத்துதல், பாலங்கள் மற்றும் ஓடுதளம் மேம்படுத்துதல் பணிகள் சுமார் 91.16 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிருஷ்ணராயபுரம், உப்பிடமங்கலம், புலியூர் மற்றும் பழையஜெயங்கொண்டம் ஆகிய நான்கு பேரூராட்சிகளில் 53.87 கோடி மதிப்பீட்டில் நான்கு குடிநீர் திட்டப் பணிகளும் 28.18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலைகள் மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்றுள்ளன.

உப்பிடமங்கலம் பேரூராட்சியில் 5.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வாரசந்தை மேம்படுத்தப்பட்டுள்ளது. கிருஷ்ணராயபுரம் கிளை நூலகத்திற்கு 1.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடமும், 12 ஊர்ப்புற நூலகங்களுக்கு 2.64 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடமும் அமைக்கப்பட்டுள்ளது. அரசு பள்ளிகளுக்கு 109 வகுப்பறைகள் உட்பட சமையலறை, கழிவறைகள், சுற்றுச்சுவர், smart class, tablet, மிதிவண்டி ஆகியவைகள் 35.33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

மேட்டுமகாதானபுரம், கட்டளை, சேங்கல், உப்பிடமங்கலம், மனவாசி பகுதிகளில் 1.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையங்களும், 1.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கால்நடை மருந்தகங்களும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

தொகுதியில் வேலை வாய்ப்பை உருவாக்கும் நோக்கில் வெள்ளியணை பகுதியில் தனியார் சிமெண்ட் ஆலைக்கு அனுமதி வழங்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது. கடவூர் மலைப் பகுதியை தேவாங்கு வனவிலங்கு சரணாலயமாக அறிவிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இத்தோடு சிமெண்ட் சாலை, வடிகால் வசதி, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், அங்கன்வாடி மைய கட்டடங்கள் ஆகிய அடிப்படை வசதிகள் முழுமையாக செய்து கொடுக்கப்பட்டுள்ளன. திராவிட மாடல் ஆட்சியில் செய்த பணிகளை முழுமையாக பட்டியலிட்டால் நேரம் போதாது.

கரூர் மாநகராட்சிப் பகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்க ரூபாய் 92 கோடி நிதி ஒதுக்கீடு செய்தமைக்கு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், கோயம்பள்ளி, மேலப்பாளையம் ஊராட்சிகளை இணைக்கும் அமராவதி ஆற்று பாலத்திற்கு இணைப்பு சாலை அமைக்க நிலம் எடுப்பிற்கு நிதி ஒதுக்கீடு செய்தமைக்கு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், பரிந்துரை செய்த எங்கள் மாவட்ட அமைச்சர் அண்ணன் வி. செந்தில்பாலாஜி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனது தொகுதியின் கோரிக்கை சிலவற்றை குறிப்பிட்டு, எனது உரையினை நிறைவு செய்கிறேன்.

கடவூர் வட்டத்தில், மைலம்பட்டி குறுவட்டம் 16வருவாய்கிராமங்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. (மணியடிக்கப்பெற்றது) பொதுமக்களின் நலன் கருதி, மைலம்பட்டி குறுவட்டத்தினை இரண்டாக பிரித்து ஒரு புதிய குறுவட்டம் உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடவூர் தாலுகா, தரகம்பட்டியில் புதிய நீதிமன்றம் அமைத்துத்தர வேண்டுமென்றும், கிருஷ்ணராயபுரம் நீதிமன்றத்திற்கு புதிய கட்டடம் அமைத்துத்தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதி வறட்சியான பகுதியாக உள்ளதால் பருவ மழை காலங்களில் காவேரியில் செல்லக்கூடிய உபரிநீரை குழாய்கள்மூலம் எடுத்துச் சென்று தொகுதியில் உள்ள ஏரி குளங்களில் நிரப்பும் திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளபாளையம், அப்பிபாளையம், கருப்பம்பாளையம், ஏமூர், மாணிக்கபுரம், பம்பரமுத்தம்பட்டி, கட்டளை, டி. இடையபட்டி, கொட்டாம்பட்டி, சாமிபிள்ளைபுதூர் ஆகிய பகுதிகளில் கால்நடை கிளை நிலையங்கள் அமைத்துத்தர வேண்டுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், பள்ளபாளையம் ஊராட்சி மற்றும் தாளப்பட்டி ஊராட்சியை இணைக்கும் வகையில் அமராவதி ஆற்றின் குறுக்கே புதிய உயர்மட்ட பாலம் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

வீரணம்பட்டி, மாயனூர், கோயம்பள்ளி ஆகிய ஊராட்சிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்களும் வேலாயுதம்பாளையம், பாப்பயம்பாடி, கிருஷ்ணராயபுரம் பகுதியில் துணை சுகாதார நிலையங்களும் அமைத்துத்தர வேண்டுமொறு கேட்டுக்கொள்கின்றேன்.

கடவூர் தாலுகாவின் தலைமையிடமாக உள்ள தரகம்பட்டியில் பேருந்து நிலையம், போக்குவரத்து பணிமனை அமைத்திட வேண்டும்.

கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றிய பகுதிகள் வறட்சியான பகுதியாக உள்ளதால் இப்பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை அதிகமாக உள்ளது. இப்பகுதியில் உள்ள அனைத்து கிராம மக்களும் பயன்பெறும் வகையில் பிரத்யேகமாக காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மேற்கண்ட எனது தொகுதி கோரிக்கைகள் அனைத்தையும் கனிவுடன் பரிசீலனை செய்து நிறைவேற்றித்தர வேண்டுமாறு முதலமைச்சர் அவர்களையும், அனைத்து துறை அமைச்சர்களையும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னை ஈன்றெடுத்து ஆளாக்கிய தாய், தந்தையருக்கும், எனது பணிகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கிவரும் எனது கணவர், எனது மகன்களுக்கும், எனது சகோதர சகோதரிகளுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். என்னை தேர்வு செய்து, அடையாளப்படுத்தி, வெற்றி பெற செய்து வழிநடத்தி வரும் மாவட்ட கழக செயலாளர் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அண்ணன் திரு. V. செந்தில்பாலாஜி அவர்களுக்கு என் வாழ்நாள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சூரியன் உதிக்கும் திசை கிழக்கு, 200 என்பது எங்கள் தலைவரின் இலக்கு. தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என்று கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**தொகுதிக் கோரிக்கைகள்:**

கடவூர் தாலுகாவின் தலைமையிடமாக உள்ள தரகம்பட்டியில் பேருந்து நிலையம், போக்குவரத்து பணிமனை போக்குவரத்து ஆய்வாளர் பகுதி அலுவலகம், பி.உடையாப்பட்டியில் புதிய காவல் நிலையம், புதிய தீயணைப்பு நிலையம் ஆகியவற்றை அமைத்துத்தர வேண்டும்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு தொடர்பான நிபந்தனைகளை தளர்வு செய்து நடைமுறை படுத்த வேண்டும்.

ரேசன் கடை எடைத்தராசுகள் பில்லிங் மிஷினுடன் இணைத்து வழங்கப்படுவதனால் கடைகளுக்கு வழங்கப்படும் பொருட்களின் எடை சரியாக வருவதை உறுதிப்படுத்த வேண்டுமெனவும், ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு முறை தேவை பெறுவதனால் காலதாமதம் ஏற்படுகிறது. இவற்றை எளிமைபடுத்தி கொடுக்க வேண்டும்.

கரூர் மாவட்டத்தில் 8 ஊராட்சி ஒன்றியங்கள் செயல்பட்டு வருகிறது. நிர்வாகத்தை சிறப்பாக மேற்கொள்ளும் வகையில் மேலும் இரண்டு புதிய ஊராட்சி ஒன்றியங்கள் அமைத்து கொடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.



நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை மற்றும் அறிமுக கூட்டம் நாமக்கல் திருச்சி சாலையில் உள்ள நளா ஹோட்டலில் நடைபெற்றது. நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளர்களாக, தி.மு.க. மாநில செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா மற்றும் சமூக வலைதள பயிற்சியாளர் ஆலந்தூர் இளமாறன் ஆகியோர் பங்கேற்று, நிர்வாகிகளுக்கு பயிற்சி அளித்தனர். கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் ப.ராணி, பி.எஸ்.சீனிவாசன், சி.ஆனந்தகுமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் மற்றும் மாவட்ட, ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் துணை முதல்வர் மாநில இளைஞரணி செயலாளர் அவர்களின் ஆலோசனைப்படி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் ஒன்றிய அரசைக் கண்டித்து போச்சம்பள்ளியில் மாபெரும் பொதுக் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் தே. மதியழகன் எம் எல் ஏ, திராவிட இயக்க சொற்பொழிவாளர் நாஞ்சில் சம்பத் சிறப்புரை ஆற்றினார்கள். கூட்டத்தில் மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன் , சொத்து பாதுகாப்புக் குழு உறுப்பினர் இ.ஜி.சுகவனம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தினேஷ் ராஜன் உள்ளிட்ட ஏராளமானோர் உடன் பங்கேற்றனர்.